Tamilmanam – International Research Journal of Tamil Studies
An international, peer-reviewed academic journal
e-ISSN: 3049-0723
pISSN:3107-7781

தமிழ்மணம்
Peer-reviewed · Open access · Google Scholar · Crossref DOI · SJIF Imapact Factor 3.5 · Monthly
10.63300/tm12052026.18 தொகுதி 12, எண் 05 (2026) 12 05 2026 233–254 TIRJTS-2026-0016

RESEARCH ARTICLE

புதுக்கோட்டை மாவட்ட மீனவர்களின் அரசு நலத்திட்டங்கள்: ஓர் ஆய்வு

Government Welfare Schemes for Fishermen in Pudukottai District: A Study

பிரபாகரன் ஆ.[1,*], முனைவர்.விக்னேஸ்வரி ப.[2]

[1] முனைவர் பட்ட ஆய்வாளர் பதிவு எண்:B1/TAM23PDEC0362/2023 தமிழ்த்துறை. நேரு கலை மற்றும் அறிவியல் கல்லூரி.(தன்னாட்சி) பாரதியார் பல்கலைக்கழக இணைவுப் பெற்றது.கோயம்புத்துர்,தமிழ்நாடு,இந்தியா

[2] இணைப் பேராசிரியர் தமிழ்த்துறை. நேரு கலை மற்றும் அறிவியல் கல்லூரி.(தன்னாட்சி) பாரதியார் பல்கலைக்கழக இணைவுப் பெற்றது.கோயம்புத்துர்,தமிழ்நாடு,இந்தியா

***தொடர்பு ஆசிரியர்:** பிரபாகரன் ஆ., nitprabakaran.a@nehrucolleges.com

ORCID iD: பிரபாகரன் ஆ. https://orcid.org/0009-0009-3989-1529 · முனைவர்.விக்னேஸ்வரி ப. https://orcid.org/0000-0001-5023-1091

ARTICLE INFO

Article history
Received: 1 October 2026
Revised: 2 October 2026
Accepted: 5 October 2026
Published: 9 October 2026

Article ID
TIRJTS-2026-0016

Peer review
Double-blind peer review

Keywords
மீன்பிடித் தடைக்காலம்
அரசு நலத்திட்டங்கள்
சமூகப் பாதுகாப்பு
வாழ்வாதார நிலைத்தன்மை
புதுக்கோட்டை மாவட்டம்
மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள்
கொள்கைச் செயலாக்கம்.

ABSTRACT

தமிழ்நாடு அரசு கடல்வள பாதுகாப்பு நோக்கில் ஆண்டுதோறும் கடல்மீன்பிடி தடைக்காலத்தை அமல்படுத்தி வருகிறது. இது சுற்றுச்சூழல் சமநிலைக்கு அவசியமானதாக இருந்தாலும், மீன்பிடியையே முழு வாழ்வாதாரமாகக் கொண்ட புதுக்கோட்டை கடலோர மாவட்டங்களின் மீனவ குடும்பங்களுக்கு பொருளாதார நெருக்கடியை ஏற்படுத்துகிறது. இதை ஈடுகட்ட மத்திய மற்றும் மாநில அரசுகள் இணைந்து மீன்பிடி தடைக்கால நிவாரணத் திட்டத்தை நடத்தி வருகின்றன, இதன்படி 2025-26 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட மீனவர்களுக்கு ரூ.8,000 நிவாரணம் வழங்கப்பட்டது. இந்த பின்னணியில், புதுக்கோட்டை மாவட்டத்தை மையமாகக் கொண்டு, 32 மீனவக் கிராமங்களில் நேர்காணல் மூலம் தரவு சேகரித்து, திட்டத்தின் செயல்திறன், பயனாளிகளுக்கு அது சென்றடையும் நிலை, மற்றும் மீனவர்களின் சமூக-பொருளாதார அனுபவங்கள் குறித்து இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. ஆய்வின் முடிவுகளின் படி, திட்டம் குறித்த விழிப்புணர்வும் பயன்பாடும் கிராமங்களுக்கு இடையே பெரிதும் மாறுபடுகிறது என்பது தெரியவந்தது. சில பகுதிகளில் நல்ல விழிப்புணர்வும் பயன்பாடும் இருந்த போதிலும், வேறு சில இடங்களில் தகவல் பரவலின்மை, நிர்வாகத் தாமதம் மற்றும் செயல்முறைச் சிக்கல்கள் காரணமாக பலன்கள் முழுமையாக சென்றடையவில்லை. மேலும், நிவாரணத் தொகை தாமதமாக வழங்கப்படுவதும் அதன் போதாமையும் மீனவர்களை தடைக்காலத்தில் மாற்று வருமான வழிகளை நாடும் நிலைக்கு தள்ளுகிறது.

இந்த கண்டுபிடிப்புகளின் அடிப்படையில், மீனவர் கூட்டுறவு சங்கங்கள் வழியாக விழிப்புணர்வை விரிவுபடுத்துதல்,

© 2026 The Author(s) · CC BY 4.0 · OPEN ACCESS

நிவாரணத் தொகையை காலவரையறைக்குள் வழங்குதல், பயனாளிகளை அடையாளம் காணும் முறைகளை மேம்படுத்துதல், திறன் மேம்பாட்டு பயிற்சிகளை வழங்குதல், மற்றும் மீன் வளர்ப்பு போன்ற மாற்று வாழ்வாதார வாய்ப்புகளை ஊக்குவித்தல் ஆகிய கொள்கை பரிந்துரைகள் முன்வைக்கப்படுகின்றன. இவை மீனவ சமூகங்களின் பொருளாதார நிலைத்தன்மையையும், அரசு நலத்திட்டங்களின் செயல்திறனையும் அதிகரிக்கும் என ஆய்வு அமைகிறது.

Abstract

The Government of Tamil Nadu implements an annual marine fishing ban to protect marine resources and maintain ecological balance. Although this measure is essential for environmental sustainability, it creates economic hardships for fishing families in the coastal areas of Pudukkottai district, whose primary source of livelihood is fishing. To compensate for the loss of income during the fishing ban period, the Central and State Governments jointly implement a fishing ban relief scheme. Under this scheme, registered fishers were provided with financial assistance of ₹8,000 during the financial year 2025–2026. Against this background, the present study focuses on Pudukkottai district and examines the effectiveness of the scheme, its accessibility to beneficiaries, and the socio-economic experiences of fishing communities. Data were collected through interviews conducted across 32 fishing villages. The findings reveal considerable variations in awareness of and access to the scheme among different villages. While some areas demonstrate a high level of awareness and utilization, beneficiaries in other locations face difficulties in accessing the benefits due to inadequate information dissemination, administrative delays, and procedural complications. Furthermore, delays in the disbursement of relief assistance and the inadequacy of the amount compel fishers to seek alternative sources of income during the fishing ban period. Based on these findings, the study proposes several policy recommendations, including expanding awareness through fishermen’s cooperative societies, ensuring the timely disbursement of relief assistance, improving beneficiary identification mechanisms, providing skill development training, and promoting alternative livelihood opportunities such as aquaculture. These measures are expected to enhance the economic resilience of fishing communities and improve the effectiveness of government welfare schemes.

Keywords: Fishing Ban Period; Government Welfare Schemes; Social Security; Livelihood Sustainability; Pudukkottai District; Fishermen’s Cooperative Societies; Policy Implementation.

How to cite this article: ஆ., பி., & ப., மு. வி. (2026). புதுக்கோட்டை மாவட்ட மீனவர்களின் அரசு நலத்திட்டங்கள்: ஓர் ஆய்வு. *Tamilmanam – International Research Journal of Tamil Studies*, *12*(05), 233–333. https://doi.org/10.63300/tm12052026.18

Copyright and licence: © 2026 The Author(s). This is an open access article distributed under the terms of the Creative Commons Attribution 4.0 International License (CC BY 4.0), which permits unrestricted use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited.

இந்தியாவின் கடலோரப் பொருளாதார அமைப்பிலும், உணவுப் பாதுகாப்பிலும், வேலைவாய்ப்பு உருவாக்கத்திலும் கடல்சார் மீன்பிடித் தொழில் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெற்றுள்ளது. மீன்பிடித்தல், மீன் பதப்படுத்துதல், மதிப்புக்கூட்டப்பட்ட மீன் உற்பத்தி, சந்தைப்படுத்தல் மற்றும் அதனுடன் தொடர்புடைய பல்வேறு துணைத் தொழில்கள் வழியாக இலட்சக்கணக்கான குடும்பங்களின் வாழ்வாதாரத்தை இத்துறை தாங்கி நிற்கிறது. தமிழ் நாடு சுமார் 1,076 கிலோமீட்டர் நீளமுடைய கடற்கரையையும் பதினான்கு கடலோர மாவட்டங்களையும் கொண்ட தமிழ்நாடு,

இந்தியாவின் முக்கிய கடல்மீன் உற்பத்தி மாநிலங்களில் ஒன்றாக விளங்குகிறது. குறிப்பாக பாரம்பரிய மற்றும் சிறுதொழில் மீனவர்களின் வாழ்வாதாரம் கடல்சார் வளங்களை நேரடியாகச் சார்ந்திருப்பதால், இத்துறை மாநிலத்தின் சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சியில் முக்கிய பங்களிப்பை வழங்கி வருகிறது.

மீன்பிடித் தொழிலை அடிப்படையாகக் கொண்ட பொருளாதார அமைப்பைக் கொண்ட பகுதியாகத் திகழ்கிறது. இம்மாவட்ட மக்களின் வருமானம், உணவுப் பாதுகாப்பு மற்றும் குடும்ப வாழ்வாதாரம் பெருமளவில் கடல்மீன்பிடியையே சார்ந்துள்ளது. இருப்பினும், அண்மைக் காலங்களில் கட்டுப்பாடற்ற மீன்பிடி, கடல்சார் சுற்றுச்சூழல் சீர்கேடு, காலநிலை மாற்றத்தின் தாக்கம், கடல் மாசுபாடு மற்றும் உயிரியல் வளங்களின் அளவுக்கு மீறிய பயன்பாடு போன்ற காரணிகளால் கடல் வளங்களின் நிலைத்தன்மை அச்சுறுத்தலுக்குள்ளாகியுள்ளது. இதன் விளைவாக, மீனினங்களின் இயற்கை இனப்பெருக்கத்தைப் பாதுகாப்பதற்கும் கடல்சார் பல்லுயிர் வளத்தை நிலைநிறுத்துவதற்கும் தமிழ்நாடு அரசு ஆண்டுதோறும் ஏப்ரல் 15 முதல் ஜூன் 14 வரை இயந்திரமயமான கடல்மீன்பிடிக்கு தடைவிதித்து வருகிறது. கடல் வள மேலாண்மையின் பார்வையில் இந்நடவடிக்கை அவசியமானதாக இருந்தாலும், மாற்று வருமான ஆதாரங்கள் இல்லாத மீனவக் குடும்பங்களுக்கு இது கடுமையான பொருளாதார மற்றும் சமூகச் சவால்களை ஏற்படுத்துகிறது.

மீன்பிடித் தடைக்காலத்தின் காரணமாக உருவாகும் வருமான இழப்பை ஓரளவு ஈடுசெய்யும் நோக்கில், தமிழ்நாடு அரசும் மத்திய அரசும் இணைந்து பதிவுசெய்யப்பட்ட மீனவர்களுக்கான நிதி நிவாரணத் திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகின்றன. 2001ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட இத்திட்டம் காலப்போக்கில் பல்வேறு திருத்தங்களுக்குப் பிறகு மேம்படுத்தப்பட்டு, தற்போது ஒரு பயனாளிக்கு ரூ.8,000 நிவாரணம் வழங்கப்படும் நிலையை அடைந்துள்ளது. இதில் மாநில அரசின் பங்களிப்பாக ரூ.6,500 மற்றும் மத்திய அரசின் பங்களிப்பாக ரூ.1,500 வழங்கப்படுகிறது. மீன்பிடி நடைபெறாத காலகட்டத்தில் மீனவக் குடும்பங்களின் அடிப்படை வாழ்க்கைத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் சமூகப் பாதுகாப்பு நடவடிக்கையாக இத்திட்டம் கருதப்படுகிறது. இருப்பினும், நிவாரணத் தொகையின் போதுமான தன்மை, சரியான நேரத்தில் விநியோகம், தகுதியுடைய பயனாளிகளுக்கு முழுமையாகச் சென்றடைவது மற்றும் திட்டம் குறித்த விழிப்புணர்வு ஆகிய அம்சங்களில் இன்னும் பல நடைமுறைச் சிக்கல்கள் நிலவுகின்றன. இத்தகைய சூழலை அடிப்படையாகக் கொண்டு, புதுக்கோட்டை மாவட்டத்தில் மீன்பிடித் தடைக்கால நலத்திட்டங்களின் செயல்திறன் மற்றும் அவற்றின் சமூக-பொருளாதார தாக்கத்தை மதிப்பிடுவதே இவ்வாய்வின் முதன்மை நோக்கமாகும்.

மேலும், பண உதவியை மட்டுமே சமூகப் பாதுகாப்பிற்கான தீர்வாகக் கருதாமல், மீனவக் குடும்பங்களின் நீண்டகால வாழ்வாதார நிலைத்தன்மையை உறுதிப்படுத்தும் பல்துறை அணுகுமுறையின் அவசியத்தையும் இவ்வாய்வு எடுத்துரைக்கிறது. குறிப்பாக திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள், நிலையான மீன் வளர்ப்பு, மதிப்புக்கூட்டப்பட்ட மீன் உற்பத்தி, கடல்சார் சுற்றுலா, சிறுதொழில் ஊக்குவிப்பு மற்றும் மாற்று வருமான வாய்ப்புகளை உருவாக்கும் திட்டங்கள் போன்றவை தடைக்காலங்களில் மீனவக் குடும்பங்களின் பொருளாதாரப் பாதுகாப்பை மேம்படுத்தும் முக்கிய வழிமுறைகளாகக் கருதப்படுகின்றன. எனவே, தற்போதைய நலத்திட்டங்களின் பலம் மற்றும் வரம்புகளை விமர்சன ரீதியாக ஆராய்ந்து, கடலோர மீனவ சமூகங்களின் வாழ்வாதார மீள்திறனை வலுப்படுத்தக்கூடிய கொள்கைப் பரிந்துரைகளை உருவாக்குவதே இவ்வாய்வின் அடிப்படை நோக்கமாகும்.

புதுக்கோட்டை மீனவர்கள் :

புதுக்கோட்டை மாவட்ட கடற்கரை வடக்கே கட்டுமாவடி முதல் தெற்கே ஏனாதி வரையிலும் 42.8 கி.மீ நீளத்தை கொண்டுள்ளது. ஆவுடையார்கோவில் மற்றும் மணமேல்குடி ஆகிய இரண்டு வட்டாரங்களில் உள்ள அறுபத்தி மூன்று கிராமங்களில் மீனவ கிராமங்களாக முப்பத்திரண்டு கிராமங்கள் கடற்பரப்பில் அமைந்துள்ளது. பாக் விரிகுடாவில் அமைந்துள்ள இந்த கடல் பகுதி, பல்வேறு வகையான கடல் வளங்களைக் கொண்ட ஆழமற்ற பகுதியாகவும் உள்ளது, , கோட்டைப்பட்டினம், ஜெகதாப்பட்டினம் ஆகிய இரண்டு ஊர்கள் இம்மாவட்டத்தில் முக்கிய மீன் இறங்கு தளங்களாக உள்ளன. மணமேல்குடி மற்றும் ஆவுடையார்கோவில் ஆகிய இரண்டு வட்டாரங்கள் பிரதான கடல் சார் மீன்பிடிப் பகுதிகளாக உள்ளன, இங்குள்ள மீனவ குடும்பங்களின் எண்ணிக்கை 2026 கணக்கின் படி 9,535ஆக உள்ளது. அதில் மணமேல்குடியில் 8,159 குடும்பங்களும் ஆவுடையார்கோவிலில் 1,376 குடும்பங்களும் உள்ளன, இதில் முழுநேர மீன்வர்களாக 7,850 பேர் உள்ளனர். மணமேல்குடியில் 36 சங்கங்கள் மற்றும் ஆவுடையார்கோவிலில் 10 மீனவர் சங்கங்கள் செயல்படுகின்றன. இதில் 28 கடல் மீனவர் கூட்டுறவு சங்கங்களும் உள்ளன, 2024-2025 ஆம் ஆண்டில் மொத்த கடல் மீன் உற்பத்தி 51,029 டன்கள் ஆகும் மணமேல்குடி 40,500 டன்களும் ஆவுடையார்கோவில் 10,529 டன்களும் உற்பத்தி செய்கின்றன,

புதுக்கோட்டை மாவட்டத்தில் 379 விசைப்படகுகள், நாட்டுப் படகுகள் 1,884 கட்டுமரங்கள் 214, உள்ளன, மேலும் 4 ஐஸ் தொழிற்சாலைகள் 1 கடல் உணவு தயாரிப்பு நிறுவனம் செயல் பட்டு வருகின்றன, இந்த புள்ளி விவரங்கள் அனைத்தும் ஆவணமாக புதுக்கோட்டை வரலாறு, கலை மற்றும் கலாச்சாரத் தொகுப்பு 2024-2025 யில் 05/06/2026 அன்று வெளியிடப்பட்டுள்ளது. **“கடல் பாசி வளர்ப்பு மூலம் இதுவரை**

350 மீனவர்கள் பயன்பெற்றுள்ளனர், மீன் பிடித் தடைக்கலாத்தில் மணமேல்குடி ,ஆவுடையார்கோவில் வட்டாரங்களில் 1,154.73 லட்சம் மீனவர்கள் பயனடைந்துள்ளனர்"(1)மாவட்டத்தில். 237.04 ஹெக்டேர் பரப்பளவு கொண்ட 121 இறால் மீன் வளர்ப்பு பண்ணைகள் உள்ளன, மீன் உற்பத்தியை அதிகரித்தல், மீன் பண்ணைகளைப் பதிவு செய்தல், மீன்வள புள்ளிவிவரங்களை சேகரித்தல், மீனவர்களுக்குப் பயிற்சி அளித்தல் போன்ற நோக்கங்களுடன் மாவட்ட ஆட்சியர் தலைமையில் 2014 முதல் I PAD, DFFDA, நிறுவனங்கள் செயல்பட்டு வருகிறது.

புதுக்கோட்டை மாவட்ட மீனவக் கிராமங்கள் ;

புதுக்கோட்டை மாவட்டம் கடல்சார் பகுதியாக உள்ளதால் இங்கு மீனவ கிராமங்கள் நிறைந்துள்ளதை அறிய முடிகிறது. இவற்றில் 32 மீனவக் கிராமங்கள் ஆய்வு எல்லையாக அமைகின்றன. அவை

1	அய்யம்பட்டினம்	17	சீதாராமன்பட்டினம்
2	அரசநகரிப்பட்டினம்	18	செல்லனெந்தல்
3	அழகன்வயல்	19	துளசியார்பட்டினம்
4	அம்மாப்பட்டினம்	20	திருமங்கலப்பட்டினம்
5	அந்தோணியார்புரம்	21	பாலக்குடி
6	ஆதிப்பட்டினம்	22	பட்டன்காடு
7	ஆர்.புதுப்பட்டினம்	23	புதுக்குடி
8	ஏனாதி	24	பொன்னாகரம்
9	ஏம்பவயல்	25	பிராதாபிராமணப்பட்டினம்
10	கட்டுமாவடி	26	மிமிசல்
11	கீழக்குடியிருப்பு	27	முத்தனேந்தல்
12	குமரப்பன்வயல்	28	முத்துகுடா
13	கிருஷ்ணஜிப்பட்டினம்	29	மும்பலைபட்டினம்
14	கோட்டைப்பட்டினம்	30	மேலஸ்தனம்
15	கோபாலப்பட்டினம்	31	வடக்கம்மாப்பட்டினம்
16	ஜெகதாப்பட்டினம்	32	வடக்குமணமேல்குடி

என்பனவாகும். இங்குள்ள மீனவ குடும்பங்களின் எண்ணிக்கை - 6730 ஆண் - 15792 பெண் - 15011 மொத்தம் - 30803 மீனவர்களிடையே பட்டினவர், செம்படவர் என்ற இரு பிரிவுகளுண்டு. பட்டினவரை, பரதவர் என்றும் செம்படவர்வரை பரவர் என்றும் அழைக்கின்றனர்.

அரசு நலத்திட்டங்கள் :

புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த கடலோர மீனவக் கிராமங்களில் வாழும் மீனவர்களுக்கு மத்திய அரசும் மாநில அரசும் சார்பாக வழங்கப்படும் நலத்திட்டங்கள் பின்வருபவையாக விளக்கப்பட்டுள்ளன. அவற்றின் அடிப்படையில், மீன்பிடித் தடைக்கால நலத்திட்டம் குறித்த விழிப்புணர்வு, திட்டத்தின் பயன், தன்மை, நிதி உதவி வழங்கலில் காணப்படும் சவால்கள் மற்றும் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளிட்ட நிறுவனங்களின் பங்களிப்பு ஆகியவை இப்பகுதியில் விளக்கப்படுகின்றன. மீனவர்களின் வாழ்வியலிலும் தொழிற்முறையிலும் சந்திக்கக்கூடிய துன்பங்களை அறிந்த அரசு அவர்களுக்கு பயன் பெரும் வகையில் பல்வேறு நலத்திட்டங்களை செய்து வருகிறது. அதற்குத் தகுதியாக பதினெட்டு வயது முடிவடைந்திருக்க வேண்டும். மீனவர் உறுப்பினர் அடையாள அட்டை வைத்திருக்க வேண்டும். மேலு மீனவர்களுக்காக மீன்வளத்துறை மற்றும் கடலோரப் பாதுகாப்பு படை போன்ற திட்டங்கள் செயல் பட்டு வருகிறது. இத்திட்டங்கள் மீனவர்களுக்கு மட்டுமே உரியதாக உள்ளது. மீனவர் அல்லாதோருக்கு அரசு திட்டங்கள் நடைமுறை படுத்துவதில்லை. மீனவக்குடும்பத்தில் யாரவது ஒரு நபர் அரசு வேலைகளில் இருந்தால், அவர்கள் மீன்பிடித் தொழில் செய்து வந்தாலும் அரசு திட்டங்களில் இருந்து இவர்கள் விளக்கப்படுகின்றனர். மேலும், மீனவர்களுக்கு அரசு சார்ந்த திட்டங்கள் பின்வருமாறு பட்டியளிப்படுகின்றன.

தேசிய கடல் மீனவர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டம் :

மீனவர்களின் நலனைக் கருத்தில் கொண்டு சிறு சேமிப்பு மூலமாக NFSRS நிறுவனம் செயல்பட்டு வருகிறது. இது மீனவர்களிடையே ஒரு மாதத்திற்கு நூற்றி எழுபத்தைந்து ரூபாய் விதம் ஒன்பது மாதங்கள் கட்டவேண்டுகின்றனர். ஒன்பதாவது மாதம் நூறு ரூபாய் கட்டினால் போதுமானது இறுதியாக ஆயிரத்தி ஐந்நூறு ரூபாய் மொத்தமாக கிடைக்கும் இதில் மத்திய அரசு பங்காக ஆயிரத்தி ஐந்நூறு ரூபாயும் மாநில அரசு பங்காக ஆயிரத்தி ஐந்நூறு ரூபாயும் மீனவர்களின் கணக்குகளில் வரவு வைக்கப்படும், மேலும் இதனை மீனவர் உரிமம் வைத்துள்ளோருக்கு மட்டுமே பொருந்தும். ஆய்வுப்பகுதியில் 98% சதவிகித மீனவ மக்களுக்கு இதனை பற்றிய விழிப்புணர்வு ஏற்பட்டுள்ளது. மேலும் மீனவ குழுக்கள் மூலமாகவும் திட்டங்களை பற்றியும் செயல்பாடுகள் பற்றியும் அறிந்து கொள்ள முகாம்கள் நடத்தப்படுகிறது.

தமிழ்நாடு கடல் மீனவ மகளிர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டம் :

மீனவ மகளிருக்கும் சிறு சேமிப்பு மூலமாக பயன் பெரும் வகையில் NFSRS நிறுவனம் செயல்பட்டு வருகிறது. இது மீனவர்களிடையே ஒரு மாதத்திற்கு நூற்றி எழுபத்தைந்து ரூபாய் விதம் ஒன்பது மாதங்கள் கட்டவேண்டுமாம் ஒன்பதாவது மாதம் நூறு ரூபாய் செலுத்துகின்றனர். இறுதியாக ஆயிரத்தி ஐந்நூறு ரூபாய் மொத்தமாக பெறுகின்றனர். இதில் மத்திய அரசு பங்காக ஆயிரத்தி ஐந்நூறு ரூபாயும் மாநில அரசு பங்காக ஆயிரத்தி ஐந்நூறு ரூபாயும் மீனவர்களின் கணக்குகளில் வரவு வைக்கப்படுகிறது, மேலும் இதனை மீனவர் உரிமம் வைத்துள்ளோருக்கு மட்டுமே பொருந்தும். மேலும் அவர்கள் வேறு எந்த அரசு திட்டத்திலும் இணைந்து இருக்க கூடாது என்கின்றனர். மேலும் கடல் சார்ந்த தொழில்களான மீன் உலர்த்துதல், பதப்படுத்துதல் போன்ற தொழில்களில் ஈடுபட்டு வரும் மீனவப்பெண்களுக்கே இது பொருந்துமாறு உள்ளது. ஆய்வுப்பகுதியில் 96% சதவிகித மீனவ மகளிர் பயனடைந்துள்ளனர். இந்த தொகை தீபாவளி போன்ற பண்டிகை காலங்களில் வருவதால்,மீனவர்களுக்கு இந்த தொகை மேலும் பயனளிக்கிறது. மீனவர் மகளிர் சங்கத்தின் சார்பாக அனைத்து மீனவப் பெண்களுக்கும் இதனைப் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகின்றனர்.

கடலில் மீன்பிடிப்பு தடை செய்யப்பட்ட காலங்களில் மீனவ குடும்பங்களுக்கு நிவாரண உதவித் தொகை வழங்குதல் :

கடல் சார்ந்த உயிரினங்களின் வளர்ச்சியையும் மீனவர்களின் வாழ்வியல் பொருளாதாரத்தையும் உறுதிப்படுத்தவும் மீன் இனங்களின் இயற்கை இனப்பெருக்கச் சுழற்சியை மேம்படுத்தவும் கருதுகோளாகக் கொண்டு தமிழ்நாடு அரசு ஆண்டு தோறும் கடல் மீன்பிடி தடைக்காலத்தை நடைமுறைப்படுத்தி வருகிறது. இந்த செயல்முறை கடல் வாழ் உயிரினங்களின் வளர்ச்சிக்கும் அதனைச் சார்ந்த வளமைக்கும் நீடித்த பயன்பாட்டிற்கும் இயற்கையான சமநிலைக்கு இன்றியமையாததாக உள்ளது. **“ஒவ்வோர் ஆண்டும் ஏப்ரல் 15 முதல் ஜூன் 14 வரையிலான 61 நாள் மீன்பிடி தடைக்காலத்தில், மீன்பிடித் தொழிலை நம்பியுள்ள ஒவ்வொரு குடும்பத்திற்கும் தமிழ்நாடு அரசு ரூ.8,000 நிவாரண உதவியாக வழங்குகிறது”(2)**(தினத்தந்தி, தினகரன் செய்தி அறிக்கைகள், ஏப்ரல் 2025–2026). மத்திய மற்றும் மாநில அரசுகள் இணைந்து மீனவர்களுக்கு மீன்பிடி தடைக்கால நிவாரணத் தொகையை வழங்கி வருகிறது. அதன்படி 2024 25 - தமிழ்நாடு வரவு செலவுத் திட்டம் மூலமாக (ஆண்டு) பிப்ரவரி 19 ந்தேதி அன்று நிதி மற்றும் மனிதவள மேலாண்மை துறை அமைச்சர் அரசாணை எண் – 27-ன் படி முன்னதாக இருந்த மீன்பிடித்தொகையான 5000 ரூபாய் தற்பொழுது 8000 ரூபாய் ஆக

உயர்த்தப்பட்டுள்ளது என்று அரசாணை வெளியிட்டார். அதன்படி, மீனவர்களுக்கு 2024 ஆம் ஆண்டிலிருந்து 8000 நிவாரணமாக வழங்கப்பட்டு வருகிறது.

மீன்பிடிப்பு குறைந்த பருவ காலத்தில் கடல் மீனவ குடும்பங்களுக்கு சிறப்பு நிவாரண உதவித் தொகை வழங்குதல் :

வடகிழக்கு பருவமழை காலமான ஜனவரி, அக்டோபர், டிசம்பர் மாதங்களில் மீனவர்கள் புயல், வெள்ளம், காற்று காலநிலை, மழை, காரணமாக கடலுக்குச் செல்வதில்லை, தொழிலுக்குச் செல்லாத காரணத்தினால் வருமானம் இல்லாமல் பொருளாதாரப் பிரச்சனைகள் ஏற்படுகின்றன. இதனைச் சரி செய்ய அரசு ஆண்டு தோறும் மீன்பிடி குறைவு கால நிவாரணமாக வருடம் தோறும் ஆறாயிரம் ரூபாய் வழங்கப்படுகிறது. இந்த தொகை நேரடியாக மீனவர்களின் வங்கி கணக்கிற்கு அனுப்பப்படுகிறது. புதுக்கோட்டை மாவட்டங்களில் உள்ள 32 மீனவ கிராமங்கள் அனைத்தும் இந்த திட்டத்தில் பயன்பெற்று வருகின்றது எனப் புலப்படுகிறது.

மீனவர் குழு விபத்து காப்புறுதித் திட்டம் :

மீனவர்களை பாதுகாக்கும் வண்ணம் அரசு விபத்து காப்பீடு திட்டம் வழங்கி வருகிறது. “**மீனவர் விபத்துக் குழு காப்புறுதித் திட்டம்: மீன்பிடித் தொழிலின்போது ஏற்படும் விபத்துகளால் பாதிக்கப்படும் மீனவர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களுக்கு நிதி உதவி வழங்கும் தமிழ்நாடு அரசின் திட்டமாகும்”(3)** ('தமிழ்நாடு அரசுத் திட்டங்கள்' பகுப்பு பக்கம்,17) இதில் பல பிரிவுகளின் கீழ் மீனவர்களுக்கு விபத்து காப்பீட்டுத் தொகை வழங்கப்படுகிறது. தமிழ்நாடு அரசு மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை சார்பாக புதுக்கோட்டை மாவட்ட மீனவர் நலவாரியத்தில் வழங்கப்படும் திட்டங்கள்,

“தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியம் (NFDB) மூலம் PMMSY-ன் கீழ் அமல்படுத்தப்படும் இத்திட்டத்தில், இறந்த மீனவருக்கு ரூ.5 லட்சமும், விபத்தில் காயமடைந்தவருக்கு ரூ.2.5 லட்சமும் நிவாரணமாக வழங்கப்படுகிறது”(4) (International Collective in Support of Fishworkers (ICSF), Fisheries Sector Schemes in India: 2022-2023 அறிக்கை, பக்கம்,31) மீனவர் விபத்தினால் மரணம் அடைந்தால் அவர் மீனவ உரிமம் மற்றும் மீனவர் காப்பீட்டு திட்டத்தில் பதிவு செய்து இருந்தால் ரூபாய் -2,00,000, வழங்கப்படுகிறது, விபத்துகளில் இரண்டு கைகள்/கால்கள் இழந்தால் ரூபாய –1,00,000 வழங்கப்படுகிறது, இரண்டு கண்கள் முழுமையாக பார்வை இழந்தால் –1,00,000 ,ஒரு கண் பார்வை இழந்தால் –50,000 ,மீன்பிடிக்கையில் காணாமல் போன மீனவரின் குடும்பத்திற்கு (விபத்தின் காரணமாக) –2,00,000, மீன்பிடிக்கையில் காயமடைந்தால் –20,000 ,இயற்கை மரணம் –25,000 ,இறுதி சடங்கு உதவித்தொகை –2,500 போன்றவை மூலம் மீனவர்களின் நலம் காத்து வருகிறது. மத்திய மற்றும் மாநில அரசு என்பதில் எவ்வித ஐய்யப்பாடும் இல்லை.

பாரம்பரிய மீன்பிடிக்கலன்களை இயந்திர மயமாக்கும் திட்டத்தின் கீழ் உட்பொருத்தும்/வெளிப்பொருத்தும் இயந்திரம் வாங்க மானியம் வழங்குதல் :

பிரதான் மந்திரி மத்சய சம்பதா யோஜனா (PMMSY) மற்றும் மாநில மீன்வளத்துறை திட்டங்களின் கீழ் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. பாரம்பரிய தோணிப்படகுகளின் வேகத்தை அதிகப்படுத்தவும் மீனவர்களின் பாதுகாப்பை அதிகப் படுத்தவும் மீனவர்களின் சுமையைக் குறைப்பதற்கும் இத்திட்டம் செயல்பட்டு வருகிறது “**பாரம்பரிய படகுகளின் இயந்திரமயமாக்கல் (Motorisation of Traditional Crafts) என்ஜின் விலையில் 40% அல்லது அதிகபட்சம் ரூ.48,000 வரை மானியமாக வழங்கப்படுகிறது”(5) (**ICSF, Fisheries Sector Schemes in India அறிக்கை, 2022-23). இதில் படகுகளின் எண்னை அரசு மீன்வளத்துறையில் பதிவு செய்தல் என்ஜின் இலவசமாக வழங்கப்படுகிறது. ஒவ்வாரு ஆண்டும் குறைந்தது 50 மீனவர்களுக்கு இத்திட்டம் பயனுள்ள வகையில் இருந்து வருகிறது. மேலும் மானிய விலையில் விலையில் 40 சதவிகிதம் முதல் 60 சதவிகிதம் வரை பெண்களுக்கு 60% வரை தள்ளுபடியும் செய்து வருகிறது .8 HP முதல் 10 HP வரையிலான அதிவேக என்ஜின்கள் பொருத்தப்பட்டு மீனவர்கள் வாழ்வில் உயர வழிவகை செய்கிறது இதற்கு மீன்பிடி அடையாள அட்டை வைத்திருக்க வேண்டும். மீனவர் கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினராக இருக்க வேண்டும்.

மீனவர்களால் மீன்பிடிப்பிற்கு பயன்படுத்தப்படும் அதிவேக டீசல் எரியெண்ணெய்க்கு விற்பனை வரி விலக்கு அளித்தல் :

மீனவர்களின் பொருளாதாரப் பின்னிடைவு காரணமாக படகுகளில் அதிகமாக செலவாகும் எரிபொருள் சுமையைக் கணிசமாக குறைத்து வருகிறது. அதில், மீனவர் அடையாள அட்டை மற்றும் படகுகளின் உரிமம் வைத்து பெட்ரோல் மற்றும் டீசல் வழங்கப்படுகிறது, அதில் நாட்டுப்படகுகளுக்கு மாதம் 800 லிட்டராகவும் விசைப்படகிற்கு மாதம் 4000 லிட்டராகவும் அரசு நிர்ணயித்து அதனை செயல்படுத்தியும் வருகிறது.இதனை தமிழ்நாடு மீன் வளர்ச்சிக்கழகத்தின் கீழ் மீனவர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. ஆய்வுப்பகுதியில் கோட்டைப்பட்டினம், ஜெகதாப்பட்டினம் போன்ற இடங்களில் உள்ள மீனவர்கள் இத்திட்டத்தின் மூலம் பயனடைந்துள்ளனர்.

அண்டை நாடுகளில் சிறைவைக்கப்படும் மீனவரின் குடும்பத்திற்கு தின உதவித் தொகை வழங்குதல்.

இலங்கை கடற்படையினரால் சிறை பிடிக்கப்பட்ட மீனவக் குடும்பத்துக்கு நாள் ஒன்றுக்கு 500 ரூபாய் விதம் அந்த மீனவர்கள் தாயகம் திரும்பும் வரை அக்குடும்பத்துக்கு அரசால் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் அவர்களின் விடுதலை போன்ற செயல்களில் அரசு அதிக கவனம் வைத்து வருகிறது.

கடலில் மீன்பிடிக்கையில் காணாமற் போகும் மீனவ குடும்பத்திற்கு தின உதவித் தொகை வழங்கும் திட்டம் :

கடலில் மீன்பிடித்துக்கொண்டு இருக்கும் பொழுது கடல் சீற்றங்களால் மற்றும் படகுகளில் ஏற்படும் தொழில்நுட்பக் கோளாறுகளால் காணாமல் போன மீனவர்களுக்கு நாள் ஒன்றுக்கு 350 ரூபாயும் மாதத்திற்கு 10,500 ரூபாயும் வழங்கப்படுகிறது, தொலைந்து போன நாளில் இருந்து விபத்து காப்பீட்டு தொகையாக 2,00,000 ரூபாயும் வழங்கப்படுகிறது. இதற்கு அவர்கள் காணாமல் போனதை அரசு மீனவ நலவாரியத்தில் பதிவு செய்திருக்க வேண்டும் பின்பு கடற்படை ரோந்து காவல் அளிக்கும் அறிக்கையின் படி அதை உறுதி செய்ததும் இத்தொகை பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வழங்கப்படுகிறது.

இலங்கை கடற்படை தாக்குதலால் இறக்கும் / காயமடையும் மீனவரின் குடும்பத்திற்கு நிதி உதவி வழங்குதல் :

இலங்கை கடற்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட மீனவ குடும்பத்துக்கு தலா 100000 ஒரு லட்சம் ரூபாய் முதலமைச்சர் நிவாரண நிதியில் இருந்து வழங்கப்படுகிறது. ஆய்வுப்பகுதியில் இதுவரை 12 குடும்பங்கள் இதில் பயனடைந்துள்ளன,மேலும் படுகாயமடைந்து வருபவர்களின் குடும்பத்திற்கு ஒரு லட்சம் ரூபாய் இழப்பிடாக வழங்கப்படுகிறது, விசைப்படகு பழுதடைந்தால் எட்டு லட்சம் மற்றும் நாட்டுப்படகு பழுதடைந்தால் இரண்டு லட்சமும் வழங்கப்பட்டு வருகிறது. அதற்கு போதுமான ஆதாரங்கள் இறப்புச் சான்றுதல் மற்றும் அரசு மீன்வளத் துறையின் ஆய்வுகளின் படி இவை ஆய்வுப்பகுதியில் வழங்கப்பட்டு வருகிறது.

ஆழ்கடல் சூரை மீன்பிடிப்பிற்கு ஏற்றவாறு புதிய மீன்பிடி விசைப் படகுகள் கட்டுவதற்கு 50 % மானியம் வழங்குதல்:

புதிய படகு கட்டுவதற்காக 60 லட்சம் வரை செலவு ஆகிறது. அதனை ஊக்கப்படுத்தும் நோக்கில் அரசு 50% சதவிகிதம் செலவையும் மீதம் உள்ள தொகையை மீனவர் தனியாகவும் அல்லது வங்கிகளின் உதவி பெற்றோ கட்டினால் போதுமானதாகும் என்கிறது அரசு. இத்திட்டத்தின் மூலம் 12 கிலோமீட்டருக்கு அப்பால் உள்ள சூரை மீன்களை பிடிக்க இவ்வகையான திட்டம் உதவி வருகிறது மேலும். மீனவர்களின் எல்லை பாதுகாப்பு கருதியும், அவர்களை எச்சரித்தும் வருகிறது. போதுமான மீனவர்கள் அடையாள அட்டைகள் மற்றும் ஆதாரங்கள் அடிப்படையில் இத்திட்டம் செயல்பட்டு வருகிறது.

பத்தாம் வகுப்பு மற்றும் பனிரெண்டாம் வகுப்பு படிக்கும் மீனவ மாணவ மாணவியருக்கு ஊக்கப் பரிசுத் தொகை வழங்குதல் :

மீனவர்களின் நலனைப் பாதுகாக்கும் அரசு மீனவ உறுப்பினரின் மகன் மற்றும் மகள் கல்விக்காக உதவித்தொகை வழங்கி வருகிறது. அதில், பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்ற மாணவருக்கு 1,250 ரூபாய் மாணவிக்கு 1,500 ரூபாய் பன்னிரண்டாம் வகுப்புதேர்ச்சி பெற்ற மாணவருக்கு 1,750 ரூபாய் மாணவிக்கு 2,000 ஐ.டி.ஐ / பாலிடெக்னிக் மாணவர் 1,750 ரூபாய் மாணவி 2,250ரூபாய் இளங்கலை பட்டப்படிப்பு மாணவர் 2,250 ரூபாய் மாணவி 2,750ரூபாய் இளங்கலை தொழில்நுட்ப கல்வி மாணவர் 2,250 ரூபாய் மாணவி 2,750 ரூபாய் முதுகலை பட்டப்படிப்பு மாணவர் 4,250 ரூபாய் மாணவி 4,750 ரூபாய் போன்ற கல்வி உதவி தொகை அரசு வழங்கி வருகிறது. மற்றும் மீனவ மக்களின் திருமண உதவித்தொகையாக ஆணுக்கு 3,000 ரூபாயும்,பெண்ணுக்கு 5,000 ரூபாயும் வழங்கப்படுகிறது. “**மீன்வளர் யுவதிகளுக்கான கடல்சார் கல்வி உதவி: செயலில் உள்ள மீனவ குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்கள், அரசு அறிவித்துள்ள ஆறு கடல்சார் படிப்புகளில் (Maritime Education) சேர்ந்தால், ஒரு மாணவருக்கு ரூ.50,000 நிதி உதவி வழங்கப்படுகிறது”(6)** (தமிழ்நாடு மீன்வளத்துறை இணையதளம், fisheries.tn.gov.in, 'What We Do') மேலும் கருவுற்ற பெண்களுக்கு. மகப்பேறு உதவித்தொகையாக 6,000 ரூபாயும் கருச்சிதைவு/கருக்கலைப்பு ஏற்பட்டால் 3,000 ரூபாயும் அரசு தரப்பில் மீனவ மக்களுக்கு வழங்கப்படுகிறது.இதன் தகுதியாக மீனவர் உரிமம் வைத்திருந்தால் போதுமானதாக உள்ளதாகவும் அறியப்படுகிறது.

மீனவர்களுக்கு கைரேகை மற்றும் புகைப்படத்துடன் கூடிய உயிர் புள்ளியல் (Bio Metric) அடையாள அட்டை வழங்குதல் :

மீனவர்களின் பாதுகாப்பு மற்றும் நலன் கருதி டிஜிட்டல் அடையாள அட்டை வழங்கப்படுகிறது. “**பயோமெட்ரிக் அடையாள அட்டை (Biometric ID Card) திட்டம்: கடலோர பாதுகாப்பை உறுதி செய்யும் நோக்கில் 2008 மும்பை தாக்குதலுக்குப் பின் அறிமுகப்படுத்தப்பட்ட இத்திட்டத்தின் கீழ், தமிழ்நாட்டில் மட்டும் 1,86,512 பயோமெட்ரிக் அடையாள அட்டைகள் கடல் மீனவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன”(7)** (தமிழ்நாடு மீன்வளத்துறை அதிகாரப்பூர்வ இணையதளம், fisheries.tn.gov.in, 'What We Do' பக்கம்,4). ஆழ்கடலில் மீன்பிடிக்கும் மீனவர்களை அடையாளம் காணவும், மானிய விலையில் பெட்ரோல் அல்லது டீசல் வாங்கவும் நிவாரணத் தொகை வழங்கவும் இந்த அடையாள அட்டை பயன்படுகிறது என்கின்றனர்.

இணையதளத்தின் வாயிலாக மீன்பிடி கலன்களை பதிவு செய்தல் மற்றும் மீன்பிடி உரிமம் வழங்குதல் :

இந்தியா அளவில் மீன்பிடிப் படகுகளையும் அதற்கான உரிமங்களையும் இணையவழி பதிவு செய்வதற்கு மத்திய/மாநில மீன்வளத் துறையால் (Registration and

Licensing of Fishing Craft) என்ற இணையதளம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இவ்வமைப்பின் மூலம் இயந்திர படகுகள், விசைப்படகுகள் மற்றும் பாரம்பரிய மீன்பிடிப் படகுகளுக்கான பதிவுகளையும் உரிமங்களையும் இணையவழி வழியிலேயே விண்ணப்பித்து பெறுகின்றனர். கடல் மீன்பிடி ஒழுங்குமுறைச் சட்டத்தின் (OMRA) கீழ் ஒவ்வெரு மீனவர்களும் செயல்பட வேண்டும்."**கடலோர பாதுகாப்பு மற்றும் கண்காணிப்பு: மீன்பிடி படகுகளின் ஆன்லைன் பதிவு, படகுகளில் ISRO உருவாக்கிய டிரான்ஸ்பாண்டர் பொருத்துதல் (தமிழ்நாட்டில் 507 படகுகளில் சோதனை அடிப்படையில் பொருத்தப்பட்டு, 7373 படகுகளில் பொருத்தும் திட்டம் முன்மொழியப்பட்டுள்ளது) ஆகியவை மீனவர்களின் கடல் பாதுகாப்பை உறுதி செய்யும் நடவடிக்கைகளாகும்"(8)** (Department of Fisheries, Government of Tamil Nadu, 'Fisheries Schemes and Initiatives' அறிக்கை, dof.gov.in). அதனை, ஆண்டு தோறும் புதுப்பிக்க இந்த சட்டங்கள் மற்றும் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

மீனவ இளைஞர்கள் கடல்சார் கல்வி பயில உதவித் தொகை வழங்குதல் :

மீன்வகுடும்ப இளைஞர்கள் கடல் சார்ந்த படிப்புகள் பயில்வதற்கு அரசு சார்பாக கல்வித் தொகை குறைத்தல், மீனவ இளைஞகர்களுக்கு முன்னுரிமை அளித்தால் போன்றவை இந்த திட்டத்தின் முதன்மை நோக்கமாகும். கடல் சார்ந்த இளைஞர்கள் கடல் சார்ந்த நவீன தொழில்நுட்பத்தை மேம்படுத்துவது அவர்களுக்கிடையே ஒரு உயர்வான மனநிலையை உருவாக்குகின்றன. மேலும் பாரம்பரிய மற்றும் மரபு தொழிலான மீன்பிடித்தொழிலில் நல்ல முன்னேற்றம் அடையவும் இந்த திட்டம் செயல் பட்டு வருகிறது.

மூலதன நிதியின் மூலம் காணாமல் போன / துப்பாக்கி சூட்டில் இறந்த மீனவரின் குழந்தைகளின் உயர் கல்விக்கு நிதி உதவி வழங்குதல் :

தமிழ்நாடு மீன்வளத்துறை சார்பாக, **"மீனவர் நல வாரிய மூலதன நிதி"** மூலம் மீன்பிடிக்கும் போது எதிர்பாராதவிதமாக காணாமல் போனவர்கள் அல்லது துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்த மீனவர்களின் குழந்தைகளின் உயர்கல்விச் செலவுக்காக சிறப்பு நிதியுதவி திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. பெற்றோரை இழந்து தவிக்கும் மீனவக் குடும்பங்களின் குழந்தைகள் தங்களின் படிப்பைப் பாதியில் நிறுத்தாமல் உயர்கல்வியைத் தொடர இத்திட்டம் உறுதுணையாக உள்ளத. மேலும் அந்த மீனவக்குழந்தைகளின் படிப்பை முழுவதையும் அரசு ஏற்று நடத்தி வருகிறது.

மீன்வளார்ப்போர் மேம்பாட்டு முகமை மூலம் வழங்கப்படும் சலுகைகள் / உதவிகள் :

மீனவர்களுக்கான சிறு தொழில் முனைவோர் வாய்ப்புகளை உருவாக்க, மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமை FFDA - மூலம் உள்நாட்டு மீன்வளர்ப்பை ஊக்குவிக்கவும், மீன் விவசாயிகளின் வாழ்வாதாரத்தை உயர்த்தவும் மத்திய மாநில அரசுகள் இணைந்து பல்வேறு சலுகைகளையும், மானியங்களையும் அரசு உதவிகளையும் மீனவ மக்களுக்கு வழங்கி வருகின்றனர. இதன் தலைவராக மாவட்ட ஆட்சியர் விளங்குகிறார். பிரதான் மந்திரி மத்சய சம்பதா யோஜனா - PMMSY) பிரதான் மந்திரி மத்சய சம்பதா திட்டத்தின் கீழ் புதிய மீன்குளங்கள் அமைத்தல், மீன்குஞ்சு வளர்ப்புப் பண்ணை., தொழில்நுட்பக் குளங்கள், வீட்டுப் பின்புற அலங்கார மீன் வளர்ப்பு, பனிக்கட்டி பெட்டியுடன் கூடிய இருசக்கர வாகனம், போன்றவை மத்திய, மற்றும் மாநில அரசுகளால் மீனவ மக்களுக்கு வழங்கப்படுகிறது. **“பிரதம மந்திரி மத்ஸ்ய சம்பதா யோஜனா (PMMSY): மீன்வளத் துறையின் உள்கட்டமைப்பு மேம்பாடு, மீன் உற்பத்தி அதிகரிப்பு, மீனவர்கள் மற்றும் மீன் விவசாயிகளின் வருமான உயர்வு ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டது”(9)** (Department of Fisheries, Government of India, pmmsy.dof.gov.in). இதில் பொதுப்பிரிவு, 60 சதவிகிதம் மற்றும் ஆதிதிராவிடர், பழங்குடியினர் 40 சதவிகிதம் என்ற அளவில் மானியம் வழங்கப்படுகிறது. இதற்கு மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமையில் (FFDA) உறுப்பினராகப் பதிவு செய்ய வேண்டும் என்று அறியமுடிகிறது.

சுவர்நீர் மீன்வளார்ப்போர் மேம்பாட்டு முகமை மூலம் வழங்கப்படும் சலுகைகள் / உதவிகள் :

மீனவர்கள் கூண்டு வைத்து மீன் வளர்ப்பு முறை நடத்துவதை அதிகப்படுத்தவும் கடல் சார்ந்த வளங்கள் மேம்படவும் இந்த திட்டம் செயல்பட்டு வருகிறது. இந்திய கடலோர காவல்படை / கடற்படையில் சேர பயிற்சி: **“தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சரின் அறிவிப்பின்படி, ஆண்டுதோறும் 300 மீனவ இளைஞர்களுக்கு 6 தொகுதிகளாக, இந்திய கடலோர காவல்படையுடன் இணைந்து சிறப்பு பயிற்சி அளிக்கப்படுகிறது; மேலும் 20 மீனவ இளைஞர்களுக்கு அரசுப் போட்டித் தேர்வுகளுக்கான 6 மாத சிறப்புப் பயிற்சியும் வழங்கப்படுகிறது”(10)** (தமிழ்நாடு மீன்வளத்துறை இணையதளம், fisheries.tn.gov.in, 'What We Do' பக்கம் 18.

தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டம் :

மீன் வளர்ப்பு, மற்றும் பாசி வளர்ப்பு, இருசக்கர வாகனத்தில் மீன்கள் விற்பனை செய்தல் போன்றவைகளைச் செயல்படுத்தி மேம்பாடு அவர்களை அடைய செய்வதே இந்த திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியம், உள்நாட்டு மீன்வளம் மற்றும் கடலோர மீன் வளர்ப்பு :

தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியம் NFDB என்பது இந்திய அரசின் மீன்வளத்துறை அமைச்சகத்தின் கீழ் இயங்கும் ஒரு தன்னாட்சி அமைப்பாகும். இந்தியாவில் நீடித்த மீன் உற்பத்தியைப் பெருக்கவும், நவீனத் தொழில்நுட்பங்களை மீன் விவசாயிகளிடம் கொண்டு சேர்க்கவும் நிதி உதவி, தொழில்நுட்ப ஆதரவு மற்றும் மானியங்களை வழங்கி வருகிறது. NFDB அமைப்பானது உள்நாட்டு மீன்வளம் மற்றும் கடலோர மீன்வளர்ப்பு,வேளாண்மை ஆகிய இரண்டிற்கும் முக்கிய சலுகைகள் மற்றும் உதவிகள் வழங்கி வருகின்றன. இதில் புதிய குளங்கள் அமைப்பு மற்றும் மீன் குஞ்சுகள் வளர்ப்புப் பண்ணை, மீன்குஞ்சு பொரிப்பகங்கள் உள்ள பண்ணைகள் அமைப்பு ,செயற்கையான தொழில்நுட்பக் குளங்கள் ,மறுசுழற்சி நீர் மீன்வளர்ப்பு முறை,கூண்டு வைத்து மீன் வளர்ப்பு,உவர்நீரில் இறால் பண்ணை அமைத்தல் & மீன் பண்ணைகள், கடற்பாசி மற்றும் சிப்பி வளர்ப்பு, மீன்களை நோய்கள் தாக்காமல் தடுப்பு உபகரணங்கள் & மீன் உயிர் பாதுகாப்பு, கடல் மீன்களைக் கொண்டு செல்ல குளிரூட்டப்பட்ட வாகன வசதி, நவீன மீன் சந்தைகள், மீனவர்களுக்கு திறன் மேம்பாட்டுப் பயிற்சி போன்றவை இந்நிறுவனம் மூலமாக வழங்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் மீனவர்கள் கடல் சார்ந்த நிறுவனங்கள் பயன்பெற்று வருகின்றன.

உள்நாட்டு மீன்பாசி குத்தகை மற்றும் மீன்பிடி உரிமம் :

கடல் பகுதியில் கடற் பாசி வளர்ப்பு,மற்றும் மீன்கள் வளர்ப்பு போன்றவைகளுக்கு அரசு நிலங்களையும் மற்றும் அரசு கட்டுப்பாட்டில் உள்ள கடல் சார்ந்த பகுதிகளையும், மீனவர்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் குத்தகைக்கு விடப்படுகிறது. இந்த திட்டத்தின் மூலம் கடற் பகுதியில் அதிகமான மீனவர்கள் தொழில் முனைவோர்களாக இந்த திட்டத்தின் மூலம் விளங்குகின்றனர்.

தமிழ்நாடு நீர்வள நிலவளத் திட்டம் :

மீன்வளத் துறை கடலோர நிர்ப்பாசன, ஏரிகள், மற்றும் பண்ணைக் குளங்களில் மீன் குஞ்சுகள் இருப்புககளை ஆய்வு செய்து மேம்படுத்துதல், மீன்கள் வளர்ப்பதற்கான அரசு சார்ந்த மானியங்களை வழங்கி உதவி செய்தல் போன்றவைகளைச் செய்து வருகிறது.

தமிழ்நாடு மீனவர் நலவாரியம் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள் :

தமிழ்நாடு மீனவர் நலவாரியம் பாரம்பரிய மற்றும் கைவினைச் சார்ந்த கடல் மற்றும் உள்நாட்டு மீனவர்கள், மீன் வியாபாரிகள் மற்றும் மீன்சார் தொழிலாளர்களின் சமூக மற்றும் பொருளாதார பாதுகாப்பிற்காக பல்வேறு நலத்திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. “**புதுக்கோட்டை மாவட்டத்திற்கான குறிப்பிட்ட திட்டம் — செயற்கை பவளப்பாறை: ராமநாதபுரம், திருவாரூர், தஞ்சாவூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் மீன்வளத்தை மேம்படுத்தும் நோக்கில், தமிழ்நாடு முழுவதும் 213**

இடங்களில் அமைக்கப்பட்ட செயற்கை பவளப்பாறைத் திட்டத்தின் இறுதிக் கட்டமாக இந்த மாவட்டங்களில் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது”(11) (Vetrii IAS – TNPSC Gateway, 2026).இதில் பதிவு செய்துள்ள உறுப்பினர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தினருக்கு வழங்கப்படும் முக்கிய உதவித்தொகைகள் சலுகைகள், விபத்து மற்றும் இயற்கை மரண நிவாரண உதவிகள், கல்வி உதவித்தொகைகள், திருமண நிதி உதவி, மகப்பேறு மற்றும் கருச்சிதைவு நிதி உதவி, முதியோர் ஓய்வூதியம் போன்றவை மீனவர்களுக்கு பாதுகாப்பாகவும், ஆதரவாகவும் இருந்து வருவதை அறியமுடிகின்றது.

நலத்திட்டம் குறித்த விழிப்புணர்வு

மீனவர்களிடையே மீன்பிடித் தடைக்கால நிவாரணத் திட்டம் குறித்த விழிப்புணர்வு பொதுவாக உயர்ந்த நிலையில் காணப்பட்டது. இருப்பினும், கிராமங்களுக்கு இடையே குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் இருந்தன. மீனவர் பெரும்பாலானோர் (சுமார் 98%) திட்டத்தைப் பற்றிய தெளிவான அறிவைக் கொண்டிருந்தனர். இதற்கு அங்குள்ள மீனவர் கூட்டுறவுச் சங்கங்களின் செயல்பாடுகளும், தகவல் பரப்பும் முறைகளும் முக்கிய காரணங்களாக அமைந்துள்ளன. இருப்பினும், திட்டத்தின் தகுதி நிபந்தனைகள், வழங்கப்படும் நிதி உதவியின் அளவு மற்றும் வழங்கும் காலம் தொடர்பாக சிலரிடையே இன்னும் தெளிவின்மை நிலவுவதாகவும் ஆய்வு வெளிப்படுத்துகிறது.

மீன்பிடித் தடைக்காலத்தின் பொருளாதார தாக்கம் :

மீன் வளத்தைப் பாதுகாப்பதற்காக அமல்படுத்தப்படும் தடைக்காலம் சுற்றுச்சூழல் நோக்கில் இன்றியமையாததாக இருந்தாலும், தினசரி வருமானத்தை மட்டுமே சார்ந்துள்ள மீனவர்களின் வாழ்க்கையில் இது குறிப்பிடத்தக்க பொருளாதார பாதிப்பை ஏற்படுத்துகிறது. தடைக்காலத்தில் குடும்பங்களின் வாழ்வாதாரம் பெரிதும் பாதிக்கப்படுவதாக தெரிவித்தனர். இந்த காலகட்டத்தில் குடும்பச் செலவுகளை சமாளிப்பதற்காக பலர் கட்டுமானத் தொழில், உப்பளத் தொழில், தற்காலிக கடை வேலைகள் உள்ளிட்ட குறைந்த வருமானம் தரும் தொழில்களில் ஈடுபட வேண்டிய சூழல் உருவாகிறது. குறிப்பாக மணமேல்குடி, மற்றும் மீமிசல், பகுதிகளில் உப்பள வேலைக்கு மாறுவது பொதுவான நடைமுறையாக இருந்தாலும், அது மீன்பிடித் தொழிலுடன் ஒப்பிடும்போது மிகவும் குறைவான வருமானத்தையே வழங்குவதாக ஆய்வில் தெரியவந்தது.

மீன்பிடித் தடைக்கால நிவாரணமாக மாநில அரசு வழங்கும் ₹6,500 மற்றும் மத்திய அரசு வழங்கும் ₹1,500 ஆகியவற்றைச் சேர்த்து கிடைக்கும் ₹8,000 தொகை, சுமார் 61 நாட்கள் நீடிக்கும் தடைக்காலத்தில் ஒரு குடும்பத்தின் அத்தியாவசியச் செலவுகளை முழுமையாக ஈடுகட்ட போதுமானதாக இல்லை என்று பெரும்பாலான மீனவர்கள்

கருத்து தெரிவித்தனர். வாழ்க்கைச் செலவுகள் தொடர்ந்து அதிகரித்து வரும் நிலையில், தற்போதைய நிவாரணத் தொகை தேவைக்கேற்ப இல்லை என்பதும் ஆய்வின் முக்கியமான கண்டுபிடிப்பாகும்.

மேலும், மீன் உலர்த்துதல், மீன் விற்பனை போன்ற துணைத் தொழில்களில் ஈடுபடும் பெண்கள் இந்நலத்திட்டத்தின் பயனாளிகளாக சேர்க்கப்படாததால், மீனவக் குடும்பங்களின் பொருளாதார சுமை மேலும் அதிகரிக்கிறது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

நிவாரணத் திட்டத்தின் செயல்திறன் :

ஆய்வில் பங்கேற்ற தகுதியுடைய பெரும்பாலான மீனவர்கள் அரசின் நிவாரணத் தொகையைப் பெற்றதாகக் குறிப்பிட்டிருந்தாலும், அதன் செயல்பாட்டில் பல நடைமுறைச் சிக்கல்கள் இருப்பதாக அவர்கள் தெரிவித்தனர்.

அவற்றில் முக்கியமான பிரச்சினையாக நிவாரணத் தொகை வழங்குவதில் ஏற்படும் தாமதம் காணப்பட்டது. தடைக்காலம் தொடங்கிய உடனேயே நிதி உதவி கிடைக்காத காரணத்தால், பல குடும்பங்கள் கடன் வாங்குதல் அல்லது தற்காலிக வேலைகளை நாடுதல் போன்ற மாற்று வழிகளைத் தேர்ந்தெடுக்க வேண்டிய சூழ்நிலை உருவாகிறது. குறிப்பாக பல பகுதிகளில், நிவாரணத் தொகை தடைக்காலம் தொடங்கிய பல வாரங்களுக்குப் பிறகே கிடைப்பதாக பதிலளிப்பவர்கள் தெரிவித்தனர். இதனால் அவசர கால நிதித் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் திட்டத்தின் பயன் குறைகிறது.

மேலும், பதிவு செய்யப்பட்ட மீனவர் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களுக்கு மட்டுமே திட்டத்தின் பலன்கள் வழங்கப்படுவதால், பதிவு செய்யப்படாத மீனவர்கள் மற்றும் முறைசாரா தொழிலாளர்கள் இந்நலத்திட்டத்தின் பயனைப் பெற முடியாமல் உள்ளனர். இதன் விளைவாக, மிகவும் பாதிப்புக்குள்ளாகும் சமூகப் பிரிவினரே திட்டத்தின் பாதுகாப்பு வளையத்திற்கு வெளியே விடப்படுகின்றனர் என்பது ஆய்வின் முக்கியமான கண்டறிதலாகும்.

நலத்திட்டத்தைப் பெறுவதில் மீனவர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் :

திட்டம் குறித்த போதிய விழிப்புணர்வு அனைத்து பகுதிகளிலும் சமமாக இல்லாதது குறிப்பிடத்தக்க பிரச்சினையாகும். சில பகுதியில் திட்டத்தின் தகுதி விதிமுறைகள், விண்ணப்ப நடைமுறை மற்றும் நிவாரணத் தொகை வழங்கப்படும் காலம் குறித்து பலரிடையே குழப்பநிலை காணப்பட்டது. இதனால் தகுதியுடைய சில மீனவர்கள்கூட திட்டத்தின் முழு பயனைப் பெற முடியாத சூழல் ஏற்பட்டுள்ளது.

இரண்டாவதாக, குடும்ப அட்டை, மீனவர் அடையாள அட்டை, கூட்டுறவுச் சங்க உறுப்பினர் சான்று போன்ற பல்வேறு ஆவணங்களை கட்டாயமாக சமர்ப்பிக்க

வேண்டிய நிலை, முறைசாரா தொழிலாளர்கள் மற்றும் பகுதி நேர மீனவர்களுக்கு பெரும் சிரமத்தை ஏற்படுத்துகிறது. தேவையான ஆவணங்கள் இல்லாத காரணத்தால் பலர் நிவாரண உதவியிலிருந்து விலக்கப்படுகின்றனர்.

மேலும், நிவாரணத் தொகை கிடைப்பதில் தாமதம் அல்லது விண்ணப்ப நிராகரிப்பு போன்ற பிரச்சினைகளுக்கு உரிய குறைதீர்ப்பு அமைப்பு இல்லாதது, மீனவர்களின் அதிருப்தியை அதிகரிக்கிறது. சிலர் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர் புதுப்பித்தல் மற்றும் தனிப்பட்ட தகவல்களை திருத்துதல் போன்ற நிர்வாக நடைமுறைகளும் அதிக காலதாமதத்தை ஏற்படுத்துவதாகக் குறிப்பிட்டனர். இதன் விளைவாக, தகுதியுடைய பலருக்குக் கூட உரிய நேரத்தில் நிதி உதவி கிடைக்கவில்லை.

மீனவர் கூட்டுறவுச் சங்கங்களின் பங்களிப்பு

மீன்பிடி தடைக்கால நிவாரணத் திட்டத்தை மீனவர்களிடம் கொண்டு சேர்ப்பதில் மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் முக்கிய இடைத்தரகர்களாகச் செயல்படுகின்றன. இந்தச் சங்கங்கள் தகுதியுடைய பயனாளிகளை அடையாளம் காணுதல், விண்ணப்பங்களைத் தயாரித்தல், தேவையான ஆவணங்களைச் சரிபார்த்தல் மற்றும் நிவாரணத் தொகை வழங்கும் செயல்முறையை ஒருங்கிணைத்தல் போன்ற பல்வேறு பணிகளை மேற்கொண்டு, மீனவர்களுக்கும் அரசின் மீன்வளத்துறைக்கும் இடையிலான இணைப்புப் பாலமாக செயல்படுகின்றன.

ஆலோசனைகள் மற்றும் கொள்கைப் பரிந்துரைகள் :

புதுக்கோட்டை மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வின் முடிவுகள், மீன்பிடி தடைக்காலத்தில் அரசின் நிவாரணத் திட்டம் மீனவர்களின் வாழ்வாதாரத்தை பாதுகாப்பதில் முக்கிய பங்கு வகித்தாலும், அதன் செயல்பாட்டில் பல நடைமுறைச் சவால்கள் தொடர்வதை வெளிப்படுத்துகின்றன. இந்நிலையை மேம்படுத்துவதற்காக பின்வரும் பரிந்துரைகள் முன்வைக்கப்படுகின்றன. மாவட்ட அளவில் மீனவ கிராமங்களுக்கு ஏற்ப திட்ட விழிப்புணர்வு முகாம்களை அதிக அளவில் நடத்த வேண்டும். நிவாரண உதவித் தொகைகளை நேரடியாக, தாமதமின்றி வங்கிக் கணக்கில் செலுத்தும் முறையை (DBT) மேலும் வலுப்படுத்த வேண்டும். செயற்கை பவளப்பாறை போன்ற நீண்டகால மீன்வளத் திட்டங்களின் தாக்கத்தை தொடர்ந்து கண்காணிக்க வேண்டும். மீனவ இளைஞர்களுக்கான கல்வி மற்றும் மாற்றுத் தொழில் பயிற்சி வாய்ப்புகளை மேலும் விரிவுபடுத்த வேண்டும்.

முடிவுரை :

புதுக்கோட்டை மாவட்டக் கடலோர மீனவ சமூகங்களை மையமாகக் கொண்டு, ஆண்டுதோறும் அமல்படுத்தப்படும் மீன்பிடி தடைக்காலத்தில் தமிழ்நாடு அரசால் செயல்படுத்தப்படும் நிவாரணத் திட்டங்களின் செயல்திறன் மற்றும் அவை மீனவர்களின் வாழ்வாதாரத்தில் ஏற்படுத்தும் தாக்கத்தை ஆராய்கிறது. கடல்சார் உயிரினங்களின் இனப்பெருக்கம், மீன்வளப் பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் சமநிலையை உறுதிப்படுத்தும் நோக்கில் ஏப்ரல் 15 முதல் ஜூன் 14 வரை அமல்படுத்தப்படும் மீன்பிடி தடைக்காலம், இயற்கை வளங்களைப் பாதுகாக்கும் முக்கியமான சுற்றுச்சூழல் நடவடிக்கையாக விளங்குகிறது. எனினும், முழுமையாக கடல்சார் மீன்பிடியையே நம்பி வாழும் மீனவக் குடும்பங்களின் பொருளாதார நிலைத்தன்மையில் இக்காலகட்டம் குறிப்பிடத்தக்க பாதிப்பை ஏற்படுத்துவதை ஆய்வு உறுதிப்படுத்துகிறது.கடலோர மீனவக் கிராமங்களைச் சேர்ந்த மீனவர்களிடம் நலத்திட்டம் குறித்த விழிப்புணர்வு, பயனாளிகளின் அணுகல், நிவாரணத் தொகையின் போதுமான தன்மை மற்றும் செயலாக்கத்தின் தரம் ஆகியவற்றில் கிராமங்களுக்கு இடையே வேறுபாடுகள் காணப்படுவதை வெளிப்படுத்துகிறது. கூட்டுறவுச் சங்கங்கள் திறம்படச் செயல்படும் பகுதிகளில் திட்டம் குறித்த விழிப்புணர்வும், நலத்திட்டப் பயன்களும் அதிக அளவில் சென்றடைந்துள்ளன. அதேவேளையில், நிர்வாகத் தாமதங்கள், ஆவணச் சிக்கல்கள் மற்றும் தகவல் பரவலின் குறைபாடுகள் காரணமாக சில பகுதிகளில் திட்டத்தின் முழுப் பயனும் மக்களிடம் சென்றடையவில்லை என்பதும் கண்டறியப்பட்டுள்ளது.

மேலும், தற்போதைய ₹8,000 நிவாரணத் தொகை, தடைக்காலத்தில் மீனவக் குடும்பங்கள் எதிர்கொள்ளும் அன்றாடச் செலவுகளையும் வருமான இழப்பையும் முழுமையாக ஈடுசெய்ய இயலாததாக பதிலளிப்பவர்கள் கருதுகின்றனர். குறிப்பாக, மீன்பிடி சார்ந்த துணைத் தொழில்களில் ஈடுபடும் பெண்கள் மற்றும் முறைசாரா தொழிலாளர்கள் திட்டத்தின் வரம்பிற்கு வெளியே இருப்பது, சமூகப் பாதுகாப்பு வழங்கலில் உள்ளடக்கக் குறைபாடு நிலவுவதை எடுத்துக்காட்டுகிறது. இதனால், தற்போதைய நலத்திட்டத்தின் பயனாளி வரம்பை விரிவுபடுத்த வேண்டிய அவசியம் தெளிவாகிறது.

மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் மீன்வளத்துறை போன்ற நிறுவனங்கள், நலத்திட்டங்களை பயனாளிகளிடம் திறம்படக் கொண்டு சேர்ப்பதில் முக்கிய இணைப்புப் பாலமாகச் செயல்படுகின்றன என்பதை வலியுறுத்துகிறது. எனவே, இந்நிறுவனங்களின் நிர்வாகத் திறனை மேம்படுத்துதல், தகவல் பரப்பும் முறைகளை வலுப்படுத்துதல், நிதி வழங்கலை காலதாமதமின்றி மேற்கொள்ளுதல் மற்றும் வெளிப்படையான டிஜிட்டல் கண்காணிப்பு முறைகளை உருவாக்குதல் ஆகியவை திட்டத்தின் செயல்திறனை உயர்த்தக்கூடிய முக்கிய நடவடிக்கைகளாக அமையும். அதேபோல், திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள், மீன் வளர்ப்பு, கடலோர சுற்றுலா மற்றும் பிற மாற்று வாழ்வாதார வாய்ப்புகளை ஊக்குவிப்பதன் மூலம் மீனவர்களின் பொருளாதார நிலைத்தன்மையையும் சமூக மீள்திறனையும் வலுப்படுத்த முடியும். சமூகப் பங்கேற்பு, நிறுவனங்களின் ஒருங்கிணைந்த செயல்பாடு, விரிவான பயனாளி உள்ளடக்கம் மற்றும் காலத்திற்கேற்ற கொள்கை மேம்பாடுகள் ஆகியவற்றின் அடிப்படையில் நலத்திட்டங்களை மறுசீரமைப்பது அவசியமாகிறது. இத்தகைய ஒருங்கிணைந்த அணுகுமுறையின் மூலமே கடல்சார் சுற்றுச்சூழல் பாதுகாப்பையும், மீனவ சமூகங்களின் நிலையான வாழ்வாதாரப் பாதுகாப்பையும் சமநிலைப்படுத்த முடியும் என்பதை இவ்வாய்வு வலியுறுத்துகிறது.

துணைநூற்பட்டியல் :

இந்திய அரசு, மீன்வளத் துறை. பிரதான் மந்திரி மத்ஸ்ய சம்பதா யோஜனா (PMMSY). இந்திய அரசு, https://pmmsy.dof.gov.in/. அணுகிய நாள்: 13 அக்டோபர் 2026.

இந்திய அரசு, மீன்வளத் துறை. மீன்வளத் திட்டங்களும் முன்னெடுப்புகளும்: தமிழ்நாடு. மீன்வளம், கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வள அமைச்சகம், https://www.dof.gov.in/static/uploads/2026/04/b345ace3bcb986b555c4a2316db55053.pdf. அணுகிய நாள்: 13 அக்டோபர் 2026.

தமிழ்நாடு அரசு, மீன்வளத் துறை. "எங்களுடைய செயல்பாடுகள்." தமிழ்நாடு மீன்வளத் துறை, https://www.fisheries.tn.gov.in/WhatWeDo. அணுகிய நாள்: 13 அக்டோபர் 2026.

மீனவத் தொழிலாளர்களுக்கு ஆதரவளிக்கும் சர்வதேசக் கூட்டமைப்பு (ICSF). இந்தியாவில் மீன்வளத் துறைத் திட்டங்கள்: 2022–2023. ICSF, 2022, https://www.icsf.net/wp-content/uploads/2022/09/INDIA_FISHERIES-SCHEMES_2023-2022_13OCT2022_TOT.pdf.

வெற்றி ஐஏஎஸ்–TNPSC Gateway. "தமிழ்நாடு நிகழ்வுகள்: செயற்கைப் பவளப்பாறைத் திட்டம்." TNPSC Gateway, https://tnpscgatewayy.com/. அணுகிய நாள்: 13 அக்டோபர் 2026.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம். "புதுக்கோட்டை மாவட்டம்." தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், https://www.twadboard.tn.gov.in/. அணுகிய நாள்: 13 அக்டோபர் 2026.

"தமிழ்நாடு அரசுத் திட்டங்கள்." தமிழ் விக்கிப்பீடியா, விக்கிமீடியா அறக்கட்டளை, https://ta.wikipedia.org/. அணுகிய நாள்: 13 அக்டோபர் 2026.

"புதுக்கோட்டையில் மீன்வளத்தைப் பெருக்க செயற்கைப் பவளப்பாறைகள்." Gopalappattinam.com, ஏப்ரல் 2026. [செய்தியின் நேரடி இணைய முகவரியைச் சேர்க்கவும்.]

"தமிழ்நாட்டில் நள்ளிரவு முதல் அமலுக்கு வந்த மீன்பிடித் தடைக்காலம்." தினத்தந்தி, 15 ஏப்ரல் 2026, https://www.dailythanthi.com/news/tamilnadu/fishing-ban-in-tamil-nadu-comes-into-effect-from-midnight.

"மீன்பிடித் தடைக்காலம் இன்றுடன் நிறைவு: கடலுக்குச் செல்லத் தயாராகும் மீனவர்கள்." தினத்தந்தி, 14 ஜூன் 2026, https://www.dailythanthi.com/news/tamilnadu/fishing-ban-ends-today-fishermen-preparing-to-go-to-sea.

"தமிழகத்தில் மீன்பிடித் தடைக்காலம் தொடக்கம்!" தினமணி, 15 ஏப்ரல் 2025, ***https://www.dinamani.com/tamilnadu/2025/Apr/15/fishing-ban-begins-in-tamil-nadu.***

REFERENCE BOOKS :

1. 1.Department of Fisheries, Government of India. *Pradhan Mantri Matsya Sampada Yojana (PMMSY).* Government of India, https://pmmsy.dof.gov.in/. Accessed 13 Oct. 2026.
2. Department of Fisheries, Government of India. *Fisheries Schemes and Initiatives: Tamil Nadu.* Ministry of Fisheries, Animal Husbandry and Dairying, Government of India, https://www.dof.gov.in/static/uploads/2026/04/b345ace3bcb986b555c4a2316db55053.pdf. Accessed 13 Oct. 2026.
3. Department of Fisheries, Government of Tamil Nadu. "What We Do." *Fisheries Department, Government of Tamil Nadu*, https://www.fisheries.tn.gov.in/WhatWeDo. Accessed 13 Oct. 2026.

4. International Collective in Support of Fishworkers (ICSF). *Fisheries Sector Schemes in India: 2022–2023*. ICSF, 2022, https://www.icsf.net/wp-content/uploads/2022/09/INDIA_FISHERIES-SCHEMES_2023-2022_13OCT2022_TOT.pdf.
5. Vetrii IAS–TNPSC Gateway. “Tamil Nadu Affairs: Artificial Reef Programme.” *TNPSC Gateway*, https://tnpscgatewayy.com/. Accessed 13 Oct. 2026.
6. Tamil Nadu Water Supply and Drainage Board (TWAD Board). “Pudukkottai District.” *TWAD Board*, https://www.twadboard.tn.gov.in/. Accessed 13 Oct. 2026.
7. “தமிழ்நாடு அரசுத் திட்டங்கள்.” *தமிழ் விக்கிப்பீடியா*, Wikimedia Foundation, https://ta.wikipedia.org/. Accessed 13 Oct. 2026.
8. “புதுக்கோட்டையில் மீன்வளத்தை பெருக்க செயற்கை பவளப்பாறைகள்.” *Gopalappattinam.com*, Apr. 2026. [Insert the exact article URL.]
9. “தமிழ்நாட்டில் நள்ளிரவு முதல் அமலுக்கு வந்த மீன்பிடி தடைக்காலம்.” *தினத்தந்தி*, 15 Apr. 2026, https://www.dailythanthi.com/news/tamilnadu/fishing-ban-in-tamil-nadu-comes-into-effect-from-midnight.
10. “மீன்பிடி தடைக்காலம் இன்றுடன் நிறைவு: கடலுக்கு செல்ல தயாராகும் மீனவர்கள்.” *தினத்தந்தி*, 14 June 2026, https://www.dailythanthi.com/news/tamilnadu/fishing-ban-ends-today-fishermen-preparing-to-go-to-sea.
11. “தமிழகத்தில் மீன்பிடி தடைக்காலம் தொடக்கம்!” *தினமணி*, 15 Apr. 2025, https://www.dinamani.com/tamilnadu/2025/Apr/15/fishing-ban-begins-in-tamil-nadu.

நன்றி

The author sincerely thanks all individuals and institutions who provided support and guidance for completing this research.

நிதி ஆதரவு

This research received no external funding.

நலன் முரண்பாடு

The author declares no conflict of interest.

தரவு கிடைப்புத்தன்மை

The data supporting the findings of this study are available from the author upon reasonable request.

நெறிமுறை அறிக்கை

This study was conducted in accordance with applicable research ethics principles. If the study involved interviews or personal information, the relevant ethical approval and informed consent details should be provided here.

துணைநூல் பட்டியல்

இந்திய அரசு, மீன்வளத் துறை. பிரதான் மந்திரி மத்ஸ்ய சம்பதா யோஜனா (PMMSY). இந்திய அரசு, https://pmmsy.dof.gov.in/. அணுகிய நாள்: 13 அக்டோபர் 2026.

இந்திய அரசு, மீன்வளத் துறை. மீன்வளத் திட்டங்களும் முன்னெடுப்புகளும்: தமிழ்நாடு. மீன்வளம், கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வள அமைச்சகம், https://www.dof.gov.in/static/uploads/2026/04/b345ace3bcb986b555c4a2316db55053.pdf. அணுகிய நாள்: 13 அக்டோபர் 2026.

தமிழ்நாடு அரசு, மீன்வளத் துறை. “எங்களுடைய செயல்பாடுகள்.” தமிழ்நாடு மீன்வளத் துறை, https://www.fisheries.tn.gov.in/WhatWeDo. அணுகிய நாள்: 13 அக்டோபர் 2026.

மீனவத் தொழிலாளர்களுக்கு ஆதரவளிக்கும் சர்வதேசக் கூட்டமைப்பு (ICSF). இந்தியாவில் மீன்வளத் துறைத் திட்டங்கள்: 2022–2023. ICSF, 2022, https://www.icsf.net/wp-content/uploads/2022/09/INDIA_FISHERIES-SCHEMES_2023-2022_13OCT2022_TOT.pdf.

வெற்றி ஐஏஎஸ்–TNPSC Gateway. “தமிழ்நாடு நிகழ்வுகள்: செயற்கைப் பவளப்பாறைத் திட்டம்.” TNPSC Gateway, https://tnpscgatewayy.com/. அணுகிய நாள்: 13 அக்டோபர் 2026.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம். “புதுக்கோட்டை மாவட்டம்.” தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், https://www.twadboard.tn.gov.in/. அணுகிய நாள்: 13 அக்டோபர் 2026.

“தமிழ்நாடு அரசுத் திட்டங்கள்.” தமிழ் விக்கிப்பீடியா, விக்கிமீடியா அறக்கட்டளை, https://ta.wikipedia.org/. அணுகிய நாள்: 13 அக்டோபர் 2026.

“புதுக்கோட்டையில் மீன்வளத்தைப் பெருக்க செயற்கைப் பவளப்பாறைகள்.” Gopalappattinam.com, ஏப்ரல் 2026. [செய்தியின் நேரடி இணைய முகவரியைச் சேர்க்கவும்.]

“தமிழ்நாட்டில் நள்ளிரவு முதல் அமலுக்கு வந்த மீன்பிடித் தடைக்காலம்.” தினத்தந்தி, 15 ஏப்ரல் 2026, https://www.dailythanthi.com/news/tamilnadu/fishing-ban-in-tamil-nadu-comes-into-effect-from-midnight.

“மீன்பிடித் தடைக்காலம் இன்றுடன் நிறைவு: கடலுக்குச் செல்லத் தயாராகும் மீனவர்கள்.” தினத்தந்தி, 14 ஜூன் 2026, https://www.dailythanthi.com/news/tamilnadu/fishing-ban-ends-today-fishermen-preparing-to-go-to-sea.

“தமிழகத்தில் மீன்பிடித் தடைக்காலம் தொடக்கம்!” தினமணி, 15 ஏப்ரல் 2025, https://www.dinamani.com/tamilnadu/2025/Apr/15/fishing-ban-begins-in-tamil-nadu.

REFERENCE BOOKS :

1.Department of Fisheries, Government of India. Pradhan Mantri Matsya Sampada Yojana (PMMSY). Government of India, https://pmmsy.dof.gov.in/. Accessed 13 Oct. 2026.

Department of Fisheries, Government of India. Fisheries Schemes and Initiatives: Tamil Nadu. Ministry of Fisheries, Animal Husbandry and Dairying, Government of India, https://www.dof.gov.in/static/uploads/2026/04/b345ace3bcb986b555c4a2316db55053.pdf. Accessed 13 Oct. 2026.

Department of Fisheries, Government of Tamil Nadu. “What We Do.” Fisheries Department, Government of Tamil Nadu, https://www.fisheries.tn.gov.in/WhatWeDo. Accessed 13 Oct. 2026.

International Collective in Support of Fishworkers (ICSF). Fisheries Sector Schemes in India: 2022–2023. ICSF, 2022, https://www.icsf.net/wp-content/uploads/2022/09/INDIA_FISHERIES-SCHEMES_2023-2022_13OCT2022_TOT.pdf.

Vetrii IAS–TNPSC Gateway. “Tamil Nadu Affairs: Artificial Reef Programme.” TNPSC Gateway, https://tnpscgatewayy.com/. Accessed 13 Oct. 2026.

Tamil Nadu Water Supply and Drainage Board (TWAD Board). “Pudukkottai District.” TWAD Board, https://www.twadboard.tn.gov.in/. Accessed 13 Oct. 2026.

“தமிழ்நாடு அரசுத் திட்டங்கள்.” தமிழ் விக்கிப்பீடியா, Wikimedia Foundation, https://ta.wikipedia.org/. Accessed 13 Oct. 2026.

“புதுக்கோட்டையில் மீன்வளத்தை பெருக்க செயற்கை பவளப்பாறைகள்.” Gopalappattinam.com, Apr. 2026. [Insert the exact article URL.]

“தமிழ்நாட்டில் நள்ளிரவு முதல் அமலுக்கு வந்த மீன்பிடி தடைக்காலம்.” தினத்தந்தி, 15 Apr. 2026, https://www.dailythanthi.com/news/tamilnadu/fishing-ban-in-tamil-nadu-comes-into-effect-from-midnight.

“மீன்பிடி தடைக்காலம் இன்றுடன் நிறைவு: கடலுக்கு செல்ல தயாராகும் மீனவர்கள்.” தினத்தந்தி, 14 June 2026, https://www.dailythanthi.com/news/tamilnadu/fishing-ban-ends-today-fishermen-preparing-to-go-to-sea.

“தமிழகத்தில் மீன்பிடி தடைக்காலம் தொடக்கம்!” தினமணி, 15 Apr. 2025, https://www.dinamani.com/tamilnadu/2025/Apr/15/fishing-ban-begins-in-tamil-nadu.